# DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 56/2021 Deposition of Witness for : P.W.22**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | Calling | |
| Father's Name | : கோவிந்தன் | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 02-03-2026

முதல் விசாரணை

நான் சேலம் மாநகரம் கிச்சிபாளையம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்று வருகிறேன். கடந்த 23.10.2018 ஆம் தேதி மூலனூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்று மாலை 16.30 மணிக்கு தாராபுரம் வட்டம் முலையாம்பூண்டி கிராம நிர்வாக அலுவலர் திரு பிரபு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று மூலனூர் காவல் நிலைய குற்ற எண் 287/2018 குவிமுச 174 பிரிவின் கீழ் சந்தேக மரணம் என வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் அசல் புகாரை திரு வட்டாட்சியர் தாராபுரம் அவர்களுக்கு அனுப்பி வைத்தும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் இவ்வழக்கின் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திருமதி கே.வனிதாமணி அவர்களது பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.26. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கையில் 23.10.2018 ஆம் தேதிக்கு 5 நாட்களுக்கு முன்பு சம்பவம் நடந்திருக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

புகாரில் அ.சா.1 மற்றும் அ.சா.2 செல்போன் எண்கள் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் அ.சா.1ன் செல்போன் எண் புகாரில் கொடுக்கப்பட்டுள்ளது அ.சா.2ன் செல்போன் எண் குறிப்பிடப்படவில்லை. புகாரில் அ.சா.1 பிரேதத்தை சம்பவ இடத்தில் பார்த்த நேரம் குறிப்பாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். புகாரில் சம்பவ இடத்தில் விசிட்டிங் கார்டு கிடந்ததாக குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்ததாக குறிப்பிடப்படும் பொருட்கள் எதிலும் ரத்தம் படிந்து இருந்ததாக புகாரில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் கல்லில் ரத்தம் படிந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள் மற்ற பொருள்களில் ரத்தம் படிந்ததாக குறிப்பிடவில்லை. புகாரில் மேற்படி பிணத்தின் உடலில் காயங்கள் இருந்ததாக குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் யார் மூலமாக மேற்படி முதல் தகவல் அறிக்கை தாசில்தாருக்கு அனுப்பப்பட்டது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான் அதற்கான காலம் அதில் இல்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகாரை பெறவில்லை என்றாலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

**மேற்கண்ட குறக்கு விசாரணையை 2-ம் எதிரி தரப்பில் தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறார்கள்.**

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.03.02 21:13:43 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W.23**

| | | | |
|---|---|---|---|
| Name | : வனிதாமணி | Calling | |
| Husband's Name | : கார்த்திகேயன் | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 02-03-2026

முதல் விசாரணை

1. நான் தற்போது மதுரை மாவட்டம் சமயநல்லூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.10.2018 ஆம் தேதி மூலனூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது மேற்படி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு என்னுடைய பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த மூலனூர் காவல் நிலைய குற்ற எண் 287/ 2018 பிரிவு 174 குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவின் கீழான முதல் தகவல் அறிக்கையை 17.00 மணிக்கு பெற்றுக் கொண்டு 17:30 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான நல்லசெல்லிபாளையம் செல்லமுத்து கவுண்டர் நத்தக்காட்டு தோட்டத்தில் உள்ள சோளக்காட்டிற்கு சென்றும் சம்பவ இடத்தை சாட்சிகள் மணிவேல், சக்தி வடிவேல் ஆகியோர் முன்னிலையில் சர்ச் லைட் மற்றும் டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.27. பின்னிட்டு 18.30 லிருந்து பஞ்சாயத்துதாரர் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் சார்வு செய்து அவர்கள் முன்னிலையில் இவ்வழக்கில் இறந்து போன பெயர் விலாசம் அடையாளம் தெரியாத சுமார் 35 முதல் 40 வயது மதிக்கத்தக்க ஆண் பிரேதத்தை சர்ச் லைட் மற்றும் டார்ச் லைட் வெளிச்சத்தில் சம்பவ இடத்தில் வைத்து பிரேத விசாரணை செய்தேன் பிரேத விசாரணை அறிக்கை அ.சாஆ.28. பின்னிட்டு இறந்தவரின் இறப்பின் உண்மையான காரணத்தை அறியும் பொருட்டு மேற்படி பிரேதத்தை பரிசோதனைக்காக உரிய வேண்டுதல் கடிதத்துடன் காவல் நிலைய தலைமை காவலர் திரு.ராஜு என்பவர் மூலம் கோவை அரசு மருத்துவக் கல்லூரி

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

2. பின்னிட்டு 22.00 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சர்ச் லைட் மற்றும் டார்ச் லைட் உதவியுடன் சம்பவ இடத்திலிருந்து பிரேதத்தின் அருகில் இருந்த ரத்தக்கரை படிந்த KF கிருத்திக் ஃபேஷன் கேஷுவல் ஷர்ட் என்ற லேபிள் உடைய வெள்ளை நிறம் மஞ்சள் நிற கோடு போட்ட முழுக்கை சட்டை ஒன்றும், ரத்தக் கறை படிந்த Nehas என்று எழுதப்பட்ட கருப்பு நிற பேண்ட் ஒன்று ரத்தக்கரை படிந்த கருப்பு நிற பெர்முடாஸ் கிழிந்த இரண்டு துண்டுகள் மற்றும் ரத்தக்கரை படிந்த NSK என்று எழுதப்பட்ட சிவப்பு நிற ஷார்ட்ஸ் ஒன்று, VKC lite என்று எழுதப்பட்ட கருப்பு நிற ரப்பர் செருப்பு ஒரு ஜோடி மற்றும் ரத்தக்கரை படிந்த ஓடைக்கல் ஒன்று Omega கம்பி காடி போடும் இடம் என்று எழுதப்பட்ட விசிட்டிங் கார்டு ஒன்று ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றினேன் பின்னிட்டு அவற்றை படிவம் 91 மூலம் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதை தொடர்ந்து 22.30 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சர்ச் லைட் மற்றும் டார்ச் லைட் வெளிச்சத்தில் சம்பவ இடத்தில் வைத்து ரத்தக்கரை பணிந்த மண் சிறிதளவு மற்றும் ரத்தக்கடை படியாத மண் சிறிதளவு ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றினேன்.

3. பின்னர் சாட்சிகள் பிரபு, செல்லமுத்து, சிவமுத்து, செந்தில்குமார், சின்னசாமி மகன் செல்லமுத்து சக்தி வடிவேல், மணிவேல், கவிதா மற்றும் சிவாத்தாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 24.10.2018 ஆம் தேதி இந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடத்தின் அருகில் இருந்த ஒமேகா கம்பி காடி போடும் இடம் என்ற விசிட்டிங் கார்டில் உள்ள முகவரிக்கு சென்று அங்கிருந்த சாட்சி ராஜேந்திரன் என்பவரிடம் இறந்து போனவரின் புகைப்படம் மற்றும் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட உடமைகளின் புகைப்படங்களை காட்டி விசாரிக்க இறந்து போனவர் வெள்ளகோவில் காமராஜபுரத்தை சேர்ந்த நாகப்பன் மகன் ராமு என்று தெரியவந்தது அதன் பெயரில் சாட்சி ராஜேந்திரன் உடன் ராமு என்பவரது வீட்டிற்கு சென்று அவரது மனைவி கவிதா, கவிதாவின் சகோதரி நீலவேணி என்பவர்களிடம் மேற்படி இறந்து போனவரின் புகைப்படம் மற்றும் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட உடைமைகளின் புகைப்படங்களை காட்டி விசாரிக்க இறந்துபோனது ராமு என்று என்னிடம் உறுதிப்படுத்தினார்கள்.

4. பின்னர் சாட்சிகளுடன் கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு சவகிடங்கில் வைக்கப்பட்டிருந்த ராமு என்பவர் பிரேதத்தை அடையாளம் காட்டியும் மேற்படி சாட்சிகள் இறந்து போனவரின் பிரேதத்தை பார்த்து மேற்படி பிரேதத்தின் மேல் தாடையில் ஒரு பல் இல்லாமல் இருந்ததை குறிப்பிட்டுச் சொல்லியும் உடைமைகளை பார்த்தும்

இறந்து போனவர் ராமு தான் என்பதை உறுதி செய்தார்கள். அதன் பிறகு மேற்படி பிரேதத்தை சடலக்கூறாய்வு செய்து அதன்பிறகு மேற்படி பிரேதத்தை உறவினர் வசம் ஒப்படைத்தேன். பின்னர் சாட்சி பிரபு என்பவரை மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன் பின்னர் சாட்சிகள் ராஜேந்திரன், ஆறுமுகம், வீரக்குமார், மணி, நீலவேணி, காவலர் ராஜு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.00 மணிக்கு வழக்கில் இறந்து போன ராமுவின் பிரேத பரிசோதனையின் போது பிரேதத்திலிருந்து சேகரிக்கப்பட்ட நீல நிற சிவப்பு பார்டர் போடப்பட்ட ரத்தக்கரை படிந்த கிழிந்த நிலையில் உள்ள முண்டா பணியினை பிரேத வழிக் காவல் செய்த காவலர் ராஜு என்பவர் என்னிடம் ஆஜர் செய்ததை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன்.

5. பின்னர் வழக்கின் எதிரிகளைத் தேடி தேடி வந்ததன் பெயரில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் 25.10. 2018 காலை 9 மணிக்கு புதுப்பை அமராவதி பாலம் அருகில் தென்புறமாக வைத்து இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் ஹரிதாஸ் மற்றும் கவிதா ஆகியோரை கைது செய்து விசாரிக்க அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். பின்னர் 9.10 மணிக்கு ஆஜரில் இருந்த சாட்சிகள் பிரபு சண்முகம் ஆகியோர்கள் முன்னிலையில் 1–ம் எதிரி ஹரிதாஸ் என்பவரை விசாரிக்க அவரின் எந்தவித துன்புறுத்தலும் அச்சுறுத்தலும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எழுத்து மூலமாக பதிவு செய்தேன். 11.00 மணிக்குஇவ்வழக்கின் இரண்டாவது எதிரியான கவிதா என்பவரை எவ்வித துன்பத்திலும் அச்சுறுத்தலும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எழுத்து மூலமாக பதிவு செய்தேன். பின்னர் 13.00 மணிக்கு வழக்கின் 1–வது எதிரி ஹரிதாஸ் எடுத்து ஆஜர் செய்த வழக்கின் சம்பவத்தின் போது பயன்படுத்திய TN 38 BD 5402 என்ற எண்ணுள்ள டாடா இண்டிகோ Manza கிரே கலர் கார் ஒன்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் 14.00 1–வது எதிரி ஹரிதாஸ் புதுப்பை அமராவதி ஆற்றுப்பாலத்தில் தென்புற கரையில் புதரில் இருந்து எடுத்து ஆஜர் செய்த இந்த வழக்கின் சம்பவத்தின் போது 1–ம் எதிரி அணிந்திருந்த ரத்தக்கரை படிந்த வெளிறிய சந்தன நிற பூ மற்றும் கோடுகள் போட்ட அறிக்கை சட்டை ஒன்றை மற்றும் ரத்தக்கரை படிந்த கருப்பு நிற பேண்ட் ஒன்று ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றினேன்.

6. பின்னர் வழக்கின் 2–வது எதிரி கவிதா என்பவர் சம்பவத்தின் போது அணிந்திருந்த ஆடைகளை இரண்டாவது திரியில் அம்மா வீடான வெள்ளகோவில் காமராஜபுரத்தில் உள்ள அவரது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த ரத்தக்கரை படிந்த சிவப்பு பச்சை மஞ்சள் நிறம் உள்ள கிரேப்ஸ் சில்க் சேலை ஒன்று ரத்தக்கரை படிந்த சிகப்பு நிறம் வெள்ளை கருப்பு நிறத்தில் பூ

போட்ட ஜாக்கெட் ஒன்று ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து எதிரிகளை திரேக பரிசோதனை செய்து பாராசமுப்பித்தேன் பின்பு வழக்கின் புலன் விசாரணை அடிப்படையில் வழக்கின் சட்ட பிரிவினை 174 பிரிவு குவிமுச விலிருந்து இதசபிரிவு 302 ஆக மாறுதல் செய்து சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்தேன் மேற்படி **சட்ட மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.29.** பின்னிட்டு இரண்டு எதிரிகளையும் உரிய வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

7. 28.10.2018 ஆம் தேதி சாட்சிகள் நவீன் ராம், மணிவேல், ஆறுமுகம், செந்தில் முருகன், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை 29.10.2018 ஆம் தேதி நீதிமன்றம் மூலம் வேதியல் பகுப்பாய்வுக்காக காவலர் நீலமேகம் என்பவர் மூலம் கோவை வட்டார தடைய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். 07.12.2018 ஆம் தேதி சாட்சி வேலுச்சாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கின் சம்மந்தப்பட்ட முக்கிய சாட்சிகளின் ரகசிய வாக்கு மூலத்தை பதிவு செய்ய வேண்டி 05.01.2019 ஆம் தேதி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தாராபுரத்தில் உரிய வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் அடிப்படையில் 08.01.2019 ஆம் தேதி சாட்சிகள் மணிவேல், செந்தில்குமார், ஆறுமுகம் ஆகியோர்களை காவலர் மகேஷ் என்பவர் மூலம் நடுவர் முன்பு ஆஜர் செய்து அவர்களது வாக்குமூலத்தை 164 குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவின்படி பதிவு செய்யப்பட்டது. பின்னிட்டு 04.2.2019 ஆம் தேதி இவ்வழக்கில் இறந்துபோனவரும் பிரேதத்தை சடலக்கூறாய்வு செய்த மருத்துவர் பேரானந்தம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் சடலக்கூறாய்வு அறிக்கை பெற்றேன் சாட்சிகள் செந்தில்குமார், காவலர் முத்துப்பாண்டி, காவலர் நீலமேகம், ஜெய்சங்கர் வெங்கடேஸ்வரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வேதியல் பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.30. பின்னிட்டு எனக்கு பணி மாறுதல் வந்து விட்டதால் வழக்கின் புலன் விசாரணையை எனக்கு பின்பு மூலனூர் காவல் நிலைய ஆய்வாளராக பொறுப்பேற்ற திரு.திருஞானசம்பந்தம் என்பவர் வசம் ஒப்படைத்தேன்.

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ இடத்தில் விசிட்டிங் கார்டு மற்றும் சிகப்பு நிற ஷார்ட்ஸ் இருந்ததாக புகாரில் குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இவ்

வழக்கில் நான் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் கார் டயர் மார்க் இருந்ததாக குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். புகாரில் மேற்படி பிணம் நிர்வாண கோலத்தில் இருந்ததாக குறிப்பாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் ஒரு ஜோடி செருப்பு மற்றும் பனியன் இருந்ததாக குறிப்பாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் காவலர் ராஜு என்பவர் கொடுத்த தனி அறிக்கையில் மேற்படி பிரேதத்தின் மீது சடலக்கூறாய்வின் போது கருப்பு நிற முண்டா பனியன் கிழிந்த நிலையில் சிகப்பு நிற பார்டர் உடன் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் முண்டா பனியன் இருந்ததாக மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அ.சா.ஆ.7 பார்வை மகஜரை ஆவணம் தயார் செய்யப்பட்டு 4.30 மணி நேரம் கழித்து அ.சா.ஆ.8 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் 3.30 மணிநேரம் கழித்து தாயர் செய்துள்ளேன். பிணம் கிடந்ததாக சொல்லப்படும் தோட்டத்தின் சர்வே எண் மற்றும் அதன் பட்டா எண்ணை நான் இந்த வழக்கில் இறுதி அறிக்கையில் எங்கும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் என்னுடைய முதல் கட்ட விசாரணையின் போது மேற்படி எண்களை குறிப்பிடவில்லை.நான் விசாரித்த சாட்சிகள் யாரும் மேற்படி சர்வே எண் மற்றும் பட்டா எண்களை என்னிடம் குறிப்பிட்டுள்ளார்களா என்றால் சாட்சி–1 பிரபு என்பவர் குறிப்பிட்டுள்ளார். அ.சா.ஆ.8 ல் குறிப்பிடப்பட்டுள்ள சான்று பொருட்களை சாட்சிகள் செல்லமுத்து, சவிதா, சிவாத்தாள் ஆகியோரிடம் காட்டி அதன் அடையாளங்கள் குறித்து கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் விசாரித்து தெரிந்து கொண்டேன். மேற்படி பொருட்கள் சம்பவ இடத்தில் எப்போது இருந்து கிடந்தது என்பது குறித்து அவர்கள் சொல்லவில்லை ஆனால் சம்பவ இடத்தில் கிடந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள்.

3. இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் எதிரிகளை அடையாளம் அணிவகுப்புக்கு உட்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகளை இந்த வழக்கில் கைது செய்த பிறகு நான் ஏற்கனவே விசாரித்த சாட்சிகளிடம் காட்டி கூடுதல் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் செல்போன் எண். 9524445032 என்ற செல்போன் உரிமையாளரான சங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகளின் வீட்டுக்கு அருகில் உள்ளவர்களை விசாரித்து நான் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் அந்தரங்க நிலையில் இருந்ததாக என்னிடம் எந்த சாட்சிகளும் சாட்சியமளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில்

போட்டோகிராபர் எடுத்த புகைப்படங்களில் இறந்தபோன பிரேதம் நிர்வாண நிலையில் இருப்பதாக உள்ளது என்றால் சரிதான்.

4. பிரேதத்தை சடலக்கூறாய்வு செய்த மருத்துவரிடம் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட ஓடைக்கல்லை காட்டி அவரது கருத்துரை எதையும் நான் பெறவில்லை என்றால் சரிதான். இவ்வழககில் தாக்கல் செய்யப்பட்டு சடலக்கூறாய்வு அறிக்கை மற்றும் இறுதி கருதுறையில் மேற்படி நபருக்கு சடலக்கூறாய்வுக்கு முன்பு எவ்வளவு நேரத்தில் இறப்பு ஏற்பட்டிருக்கலாம் என்பது குறித்து எந்த விதமான கருத்துரையும் வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பகுப்பாய்வு அறிக்கையில் Item 7 முதல் 10 பொருட்களில் ரத்தக்கரை இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இறந்து போனவரின் ரத்தப்பிரிவு என்ன என்பது குறித்து தெரிந்து கொள்ள நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் பிரேதமானது அழுகிய நிலையில் இருந்ததால் ரத்த மாதிரி சேகரிக்கப்படவில்லை. சான்றுபொருட்களில் இருந்ததாக கூறப்படும் ரத்தக்கரைகளின் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அது என்ன ரத்த பிரிவு என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் என்னுடைய முதல் விசாரணையின் போது அது குறித்து தெரிந்து கொள்ளவில்லை.

5. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களுக்குள் செல்போனில் பேசிக் கொண்ட தொடர்பாக அதன் பட்டியலை வாங்கி நான் பார்வையிடவில்லை என்று சொன்னால் முதல் கட்ட விசாரணையில் நான் தெரிந்து கொள்ளவில்லை. இந்த வழக்கின் கிராம நிர்வாக அலுவலரையும் அவரது உதவியாளரையும் சாட்சியாக இருக்க சொல்லி நான் எழுத்து மூலமாக அழைப்பானை அனுப்பினேனா என்றால் இல்லை. எதிரிகளை கைது செய்தபோது அவரிகளிடமிருந்து பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக கைது நமுனாவில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி கைது நமுனா எ.சா.ஆ.1, எ.சா.ஆ.2. எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 ல் 12 வது காலம் என்னால் நிரப்பப்படவில்லை என்று சொன்னால்சரிதான். இவ்வழக்கின் இறந்து போனவர் மற்றும் எதிரிகளின் செல்போனை கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இறந்து போனவரின் செல்போன் அழைப்பு பட்டியலை நான் கை பற்றவில்லை என்றால் சரிதான் எனக்கு பின்னிட்டு இந்த வழக்கை விசாரணை செய்தவர் கைப்பற்றியுள்ளார். நான் தாக்கல் செய்துள்ள படிவம் 91 இல் பனியனை நீதிமன்றத்திற்கு அனுப்பிய படிவத்தை தவிர பிற படிவங்களில் சாட்சிகளிடம் கையெழுத்துப் பெறவில்லை என்றால் சரிதான்.

6. இந்த வழக்கில் பிணத்தை அது கிடந்த இடத்தில் இருந்து எந்த வாகனத்தில் எடுத்துச் சென்று மருத்துவமனையில் ஒப்படைத்தேன் என்று என்னுடைய விசாரணையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால்

ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்றேன். மேற்படி ஆம்புலன்ஸின் பதிவு எண் மற்றும் பிற விபரங்களை நான் தெரிவித்துள்ளேனா என்றால் அதை குறிப்பிட்டு சொல்லவில்லை. பிரேதத்தை மருத்துவமனையில் ஒப்படைத்தபோது மேற்படி பிரேதத்தை பார்வையிட்ட மருத்துவர் புவனா மேற்படி பிரேதத்தின் மீது காயங்கள் இருந்ததாக விபத்து பதிவேட்டு அருகில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. இந்த வழக்கின் ஒப்புதல் வாக்குமூலங்களை யார் தட்டச்சு செய்தார்கள் என்பது குறித்து என்னுடைய விசாரணையில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் நானே தட்டச்சு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் தட்டச்சு செய்ததாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

7. இந்த வழக்கில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் கார் திருப்பூரை சேர்ந்த பழனிசாமி என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் பதிவு சான்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் மேற்படி பழனிசாமியை ஒரு சாட்சியாக நான் விசாரிக்கவில்லை என்று சொன்னாலும் சரிதான். மேற்படி காரை 1–ம் எதிரி தான் ஓட்டி வந்தார் என்பதற்கான எந்த விதமான ஆவணத்தையும் அதன் உரிமையாளரிடமிருந்து நான் பெறவில்லை என்று சொன்னால் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை ஆனால் அவர்தான் ஓட்டிச் சென்றார் என்பதற்கான சாட்சிகளை விசாரித்துள்ளேன். சாட்சி வேலுசாமி என்பவரிடமிருந்து மேற்படி காரை விலைக்கு வாங்கி சாட்சி நவீன் ராம் என்பவர் ஓட்டி வந்தார் என்பதற்கு எந்த விதமான ஆவண சாட்சியங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 1–வது எதிரி எவ்வளவு ரூபாய் வாடகைக்கு மேற்படி வாகனத்தை எடுத்தார் என்பதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை என்று சொன்னால் எவ்வளவு ரூபாய் வாடகைக்கு எடுக்கப்பட்டது என்று குறிப்பாக சொல்லவில்லை ஆனால் எதிரி எடுத்துச் சென்றதாக சாட்சி நவீன்ராம் என்னுடைய விசாரணையின் போது தெரிவித்தார். சாட்சி செல்லமுத்து தன்னுடைய விசாரணையின் போது எத்தனை மணிக்கு அவர் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் சொன்னார் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

8. ராஜேந்திரன் என்பவரை நான் விசாரித்த போது மற்றவர்களுக்கு தருவதற்காக விசிட்டிங் கார்டை இறந்து போன நபர் தன்னிடம் வாங்கிச் சென்றதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான் ஆனால் விசிட்டிங் கார்டை வாங்கிச் சென்றதாக குறிப்பிடுகிறார். நான் செல்போனில் இருந்த போட்டோவை காட்டி இறந்து போனவரை அடையாளம் கேட்டதாக அவர் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான் ஆனால் போட்டோவை காட்டி அடையாளம் காட்டுவதாக குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கில் நான்

விசாரித்துள்ள சாட்சிகள் அனைவரும் நான் 161ன் கீழான வாக்குமூலத்தை பதிவு செய்வதற்கு முன்பு என்னால் சொல்லிக் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் சாட்சியமாக அளித்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி வீரக்குமார் தான் சாட்சி ஆறுமுகத்தின் தம்பி என்று என்னுடைய விசாரணையின் போது சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சாட்சி வீரகுமார் என்னுடைய விசாரணையின் போது ஆறுமுகம் என்பவரிடம் வேலை கேட்டு அவர் இல்லை என்று சொன்ன பிறகும் மீண்டும் அவரது பட்டறையில் வேலை செய்ததாக குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சாட்சி வீரக்குமாரிடம் கடந்த 24.10.2018 ஆம் தேதி இறந்துபோன ராமுவுடைய துணி மற்றும் செருப்புகளை காட்டி எந்தவிதமான விசாரணையும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் போட்டோக்களை காட்டி கேட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

9. வழக்கின் சான்று பொருள்களை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் மூலமாகத்தான் வேதியல் பகுப்பாய்வுக்கு அனுப்ப வேண்டும் என்பதும் மேற்படி அறிக்கை நீதிமன்றத்தில் நேரடியாக பெறப்படும் என்பதும் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் என்னுடைய விசாரணையில் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றாலும் எந்தவிதமான சான்று பொருள்களையும் கைப்பற்றவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிகளை நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றாலும் அவர்கள் என்னிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் சரி அல்ல. அதன் அடிப்படையில் எந்த சான்று பொருட்களுக்கும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சரியான முறையில் முதல் கட்ட புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மேற்கண்ட குறக்கு விசாரணையை 2–ம் எதிரி தரப்பில் தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறார்கள்.**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.03.02 21:13:55 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.